செய்தி வெளியீடு எண் : 1115 நாள் : 06.07.2022

# செய்தி வெளியீடு

## இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாள் விழா

இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் 07.07.2022 அன்று காலை 09.30 மணியளவில் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளார்கள்.

இரட்டை மலை சீனிவாசன் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கோழியாளம் என்னும் கிராமத்தில் இரட்டை மலை – ஆதியம்மாள் தம்பதியினருக்கு 07.07.1859 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார்.

பள்ளியில் படிக்கின்ற காலத்தில் சாதிக் கொடுமை இன்னல்களைக் கண்டார். சாதி வேறுபாட்டை அறவே ஒழித்திட வேண்டும் என்று உறுதியாக இருந்தார். அதற்காக தென்னிந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஆதிதிராவிடர் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமைகளை நேரில் கண்டறிந்தார். ஏழையெளிய மக்கள் கல்வி கற்பதன் அவசியத்தையும், சுகாதாரத்துடன் இருக்க வேண்டும் என்றும், சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும் என்றும், அனைவரிடமும் ஒழுங்காக பேச வேண்டும் என்ற உயர்ந்த குணங்களை கடைபிடிக்கவும் மக்களிடத்தில் வலியுறுத்தினார்.

மக்களை கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தன் ஆயுள் முழுவதும் நாட்டு மக்களுக்காக அர்ப்பணித்து வந்தார். 1891 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பறையர் மகாஜன சபை என்னும் இயக்கத்தின் மூலம், பறையன் நாளிதழ் தொடங்கி அதில் தம் கருத்துக்களைத் தொடர்ந்து எடுத்துரைத்து வந்தார். மேலும், 1893 ஆம் ஆண்டு ராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் இந்தியாவிலேயே முதன்முறையாக பழங்குடியின மக்களின் மாநாட்டைக் கூட்டி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

1930 ஆம் ஆண்டு லண்டனில் நடந்த வட்டமேசை மாநாடுகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அண்ணல் அம்பேத்கருடன் இணைந்து பங்கேற்று, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கப்பட்டால் தான் தீண்டாமை ஒழியும் என்று தனது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் மக்கள் பணி செய்தமைக்காக, ஆங்கிலேய அரசு 1926 ஆம் ஆண்டு ராவ்சாகிப் பட்டமும், 1930 ஆம் ஆண்டு ராவ் பகதூர் பட்டமும், 1936 ஆம் ஆண்டு திவான் பகதூர் பட்டமும் வழங்கி கௌரவித்தது. மேலும், அன்னாரின் 80–வது பிறந்த நாளன்று மனிதகுலத்திற்கு சிறந்த சேவையாற்றி, தான் சார்ந்த மக்களுக்குப் பல சாதனைகளைப் புரிந்தமைக்காக,

1939 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில், தமிழ்த்தென்றல் திரு. வி.க.அவர்கள் முன்னிலையில் 'திராவிடமணி' என்னும் பட்டம் வழங்கப் பட்டது.

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பதவி, புகழ் ஆகியவைகளை விரும்பாமல், தன் வாழ்நாள் முழுவதும் ஆதிதிராவிட, பழங்குடியின சமுதாயத்திற்கு அயராது உழைத்து, தான் சார்ந்த சமுதாயத்தினருக்கு ஒரு ஞானியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து நன்மதிப்பை பெற்றுள்ளார் என்றால் அது மிகையாகாது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 15.08.2000 அன்று இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டார். மேலும் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையில், இரட்டைமலை சீனிவாசன் அவர்களுடைய வாழ்க்கைக் குறிப்புகளைப் படித்துப் பார்க்கும்போது தீண்டாமைக் கொடுமைக் காரணமாக அவர் பட்ட பாடு கொஞ்சம் நஞ்சமல்ல. தனது படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு, ஊட்டியில் 10 ஆண்டுகாலம் கணக்கராக வேலை செய்தார். பின்னர் 1890 ஆம் ஆண்டு சென்னையில் குடியேறி பல அரசாங்க குறிப்பேடுகளையும், வரலாற்று நூல்களையும், கல்வெட்டுகளையும் ஆராய்ந்தார். தென்னிந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களின் வாழ்க்கை நிலைகளைக் கண்டறிந்து, சமுதாயத் தொண்டிலும், பொதுத் தொண்டிலும் ஈடுபடத் தொடங்கினார். இந்தியாவிலேயே முதன்முறையாக ஆதிதிராவிடர் மக்களின் மாநாட்டை கூட்டிய பெருமை இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்குத் தான் உண்டு. ஆதிதிராவிடர் மக்கள் சமூக ரீதியிலும், அரசியல் ரீதியிலும், தனிப்பட்ட முறையிலும் அனைத்து சமூகத்தினருக்கும் சரிநிகர் சமானமாக வாழ வழிசெய்து தர வேண்டும் என்று ஆங்கிலேய அரசுடன் தொடர்ந்து போராடினார். சென்னை மாகாண சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய 15 ஆண்டு காலத்தில் தனது சமுதாய மக்களின் நல்வாழ்வுக்கு எப்படியெல்லாம் செலவிட முடியுமோ அந்த அளவிற்கு செலவிட்டுள்ளார் என்று இரட்டைமலை சீனிவாசன் அவர்களைப் புகழ்ந்து பேசியுள்ளார்.

தமிழ்நாடு அரசின் சார்பில் இரட்டை மலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாள் விழா 07.07.2022 அன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in